பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 03 2025 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஒரு நாட்டின் கலாச்சாரம் மற்றும் நாகரீகம் அதன் வளமையான இசையால் செழுமைப்பெறும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- வளர்ச்சியடைந்த மற்றும் பாதுகாப்பான தில்லியை உருவாக்க மத்திய அரசும், தில்லி அரசும் இணைந்து செயல்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.
- விண்வெளி தொழில் நுட்பத்தில் இந்தியா, ஐரோப்பி யூனியன் இடையேயான ஒத்துழைப்பு வலுவாக உள்ளதாக மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.
- ரஷ்யாவுடனான போரை விரைந்து முடிவுக்குக் கொண்டு வர முயற்சிக்க வேண்டுமென்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப், உக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கிடம் வலியுறுத்தியுள்ளார்.
- சிலி ஒப்பன் டென்னிஸ் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் ரித்விக் சௌதாரி – கொலம்பியாவின் நிகோலஸ் இணை முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

ஒரு நாட்டின் கலாச்சாரம் மற்றும் நாகரீகம் அதன் வளமையான இசையால் செழுமைப்பெறும் என்று பிரதமர் திரு நரேந்தரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற சூஃபி இசை நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் சூஃபி பாரம்பரியம் தனித்துவமான அடையாளத்தை பெற்றுள்ளதாகக் கூறினார்.

ஆண்டுதோறும் நடைபெறும் சூஃபி பாரம்பரிய இசை நிகழ்ச்சி நாட்டின் கலாச்சாரம் மற்றும் கலைத்துறையில் முக்கியமான நிகழ்வு என்றும் இது லட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெறும் ஒரு மாவட்டம் ஒரு பொருள் உற்பத்தி கண்காட்சியை பார்வையிட்ட திரு நரேந்திரமோடி, அங்கிருந்த கைவினை கலைஞர்களுடன் கலந்துரையாடினார்.

**[]<<<>>>[]**

தில்லியின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தலைமையில் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, அம்மாநில உள்துறை அமைச்சர் திரு ஆஷிஸ் சூட், மத்திய உள்துறை செயலர் திரு கோவிந்த் மோகன், புலனாய்வு அமைப்பின் இயக்குநர் மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தலைநகரில் சட்டம் ஒழுங்கை மேம்படுத்தி குற்றங்களை கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

தலைநகரில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் தில்லி காவல்துறையின் செயல்பாடுகளை பாராட்டிய திரு அமித்ஷா, மத்திய அரசின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்த மற்றும் பாதுகாப்பான தில்லியை உருவாக்க மத்திய அரசும், தில்லி அரசும் இணைந்து செயல்படும் என்று கூறினார்.

**[]<<<>>>[]**

விண்வெளி ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்து செயல்படுவது தொடர்பாக இந்தியாவும் - ஐரோப்பிய யூனியனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

புதுதில்லி வந்துள்ள ஐரோப்பிய யூனியனின் ஆணையர் ஆன்ட்ரிஸ் **kubilius** மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங்கை சந்தித்து பேசினார்.

விண்வெளி தொழில் நுட்பத்தில் இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் இடையேயான ஒத்துழைப்பு வலுவாக வளர்ந்து வருவதாகக் கூறினார்.

விண்வெளித்துறையில் கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றம் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதில் வெளிநாடுகளை சார்ந்திருக்காமல், இந்தியா தன்னிச்சையாக செலுத்தும் வல்லமையை அடைந்துள்ளதாகவும் திரு ஜிதேந்திசிங் கூறினார்.

விண்வெளித்துறையில் இந்தியாவும், ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்து இணைந்து செயல்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

உலக பொருளாதாரம் நிச்சயமற்ற நிலையில் உள்ளபோதிலும், இந்திய பொருளாதாரம் வலுவாக உள்ளதாக மத்திய அரசின் தலைமை பொருளாளதார ஆலோசகர் திரு ஆனந்தா நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நகர்புற மற்றும் கிராமப்புற நுகர்வு அதிகரித்துள்ளதாகக் கூறினார்.

நடப்பு பருவத்தில் உணவு தானியங்களின் கொள்முதலும், அதிகரித்துள்ளதாகவும், இது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

நடப்பு நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி ஆறு புள்ளி இரண்டு சதவீதமாக இருந்தது என்றும், இது கடந்த நிதி ஆண்டில் ஐந்து புள்ளி நான்காக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பணவீக்கம் ஏற்றுமதியில் சற்று பின்னடைவு, பங்குச்சந்தை ஏற்ற இறக்கம், இந்திய ரூபாய்க்கு எதிரான டாலரின் மதிப்பு உயர்வு ஆகியவை நாட்டின் பொருளாதாரத்திற்கு கடும் சவாலாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில் வேளாண்மை, சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான அறிவிப்புகள் மற்றும் வரி குறைப்பு காரணமாக நடுத்தர மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கும் என்றும் இதனால் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடையும் என்றும் திரு ஆனந்தா நாகேஸ்வரன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

வேளாண்மை மற்றும் கிராமப்புற வளம் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழி கருத்தரங்கில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்று நிபுணர்களுடன் கலந்துரையாடுகிறார்.

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளை திறம்பட செயல்படுத்துவதற்கான உத்தியை வகுப்பதில் கவனம் செலுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் வளர்ச்சி மற்றும் கிராமப்புற வளத்துக்கு வலு சேர்க்கும் வகையில் பட்ஜெட்டின் தொலைநோக்குப் பார்வையை செயல் திட்டங்களாக மாற்றுவதற்கான ஒத்துழைப்பை இந்த கருத்தரங்கு ஊக்குவிக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் தனியார் துறை வல்லுநர்கள், தொழில்துறை பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, கடலூர் உள்ளிட்ட 12 நகரங்களில் இந்த இணையவழி கருத்தரங்கில் பங்கேற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் வல்லுநர்கள், தொழில்துறை நிபுணர்கள், விவசாயிகள் இதில் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

நடப்பு சந்தைப் பருவத்தில் நெல் மற்றும் கோதுமை கொள்முதலை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் பொது விநியோகத்துறை செயலாளர் தலைமையில் நடைபெற்ற மாநிலங்களின் உணவு மற்றும் பொது விநியோகத்துறை செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டது.

வானிலை முன்னறிவிப்பு, பருவநிலை மாற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கொள்முதல் நடவடிக்கைகளை திட்டமிடுவது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

கரீப் பருவத்தில் 70 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யவும், ரபி பருவத்தில் 310 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையை கொள்முதல் செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தெலங்கானாவில் சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் 11 முகமைகள் இதில் ஈடுபட்டுள்ளதாக நாகர் கர்னூல் மாவட்ட ஆட்சியர் திரு பகவத் சந்தோஷ் தெரிவித்தார்.

தொழிலாளர்களை மீட்கும் பணிக்கு தனிப்பட்ட நபர்களின் ஒத்துழைப்பையும் தெலங்கானா அரசு கோரியுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்பை, உக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி நேற்று வாஷிங்டனில் சந்தித்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு ஜெலன்ஸ்கி, ரஷ்யா உதவியுடன் மேற்கொள்ளப்படும் அமைதி ஒப்பந்தத்தை உக்ரைன் ஏற்றுக் கொள்ளாது என்று கூறினார்.

உக்ரைன் நாட்டிற்கு அமெரிக்காவும், அந்நாட்டு மக்களும் அளித்த ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதகாவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் அமைதியை விரும்புவதாகவும், அதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக திரு ட்டிரம்ப், ஜெலன்ஸியுடனான பேச்சுக்களின்போது, ரஷ்யாவுடனான போரை விரைந்து முடிவுக்குக் கொண்டு வர முயற்சிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து போர் நடந்தினால் உக்ரைனை அமெரிக்கா ஆதரிக்காது என்றும் திரு ட்டிரம்ப் கூறினார்.

உக்ரைனில் உள்ள கனிம வளங்களை எடுப்பது தொடர்பான ஒப்பந்தத்தை விரைவாக இறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

புனித ரமலான் நோன்பு நாளை தொடங்குவதாக தமிழக அரசின் தலைமை காஜி சலாவூதின் அயூப் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் சென்னை உள்ளிட்ட பகுதிகளில் ரமலான் பிறை நேற்று தென்படாததால் நோன்பு நாளை தொடங்கும் என்று அவர் கூறியுள்ளார்.

ராமலான் நோன்பு தொடங்கவுள்ளதையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சிலி ஓப்பன் டென்னிஸ் இறுதிப் போட்டிக்கு இந்தியாவின் ரித்விக் சௌதாரி – கொலம்பியாவின் நிகோலஸ் இணை முன்னேறியுள்ளது.

சாண்டியாகோவில் இன்று காலை நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் இந்த இணை 4-6, 7-6, 10-5 என்ற செட் கணக்கில் அர்ஜெண்டினாவின் கைடோ ஆன்ட்ரியோசி – பிரான்ஸின் தியோ அரிபேஜ் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ப்ராக் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்த வெற்றிபெற்றார்.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் செக் குடியரசின் **Nguyen thai dai van** -யை வென்றார்.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

முதலில் ஆடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 123 ரன் எடுத்தது.

124 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய தில்லி அணி 14 புள்ளி மூன்று ஓவரில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று ஒடிஸா – மொகமதன் அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் கேரளா அணி - ஜாம்ஷெட்பூர் அணியையும், மும்பை – மோகன் பெஹான் அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**